சுப்பர்
சன்றே **பாட்டா**
எழிலூட்டுகிறது
இளைஞர்களின்
நகர நடமாட்டத்திற்குரிய
அனாயாச எழில்...
ஆண்களுக்கான இன்றைய
தெரிவு சுப்பர் சன்றே.
நகரில் தாராளமாகக்
கிடைக்கிறது.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284



பக்கங்கள் 6  விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 0  ஆவணி 1  ம்ழான்: 12  இதழ்: 187
யாழ்ப்பாணம்  வியாழக்கிழமை  17-8-78



ஆவணி
பிறந்துவிட்டால்!
திருமணக் கோலம்
நம்மவர்க்கு கொண்டாட்டம்
ஃ அன்பளிப்புப் பொருட்கள்
ஃ அலங்காரப் பொருட்கள்
ஃ ஆடம்பரப் பொருட்கள்
இன்னும்பல...
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

OF SRI LANKA - J RECEIVED 1978 PERIODICALS


ஜனாதிபதி இல்லாத சமயங்களில்

# ஜனாதிபதியாக பிரதமர், பிரதமராக சபாநாயகர்!

## அரசமைப்பில் புதிய திருத்தம்

### 3-வதுவாசிப்பு எதிர்ப்பின்றிநிறைவேறியது

(கொழும்பு)

புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூன்றாவது வாசிப்பு கடந்த இரவு தேசிய அரசுப்பேரவையில் எதிர்ப்பு எதுவுமின்றி நிறைவேறியது.

வாக்களிப்பின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வாக்களிப்பைப் பகிஷ்கரித்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ்.தொண்டமான் ஆதரித்து வாக்களித்தார்.

அரசமைப்புத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் போது பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ பல திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

ஜனாதிபதி இல்லாத சமயங்களில் முன்னுரிமை வரிசைப்படி பிரதம மந்திரி ஜனாதிபதியாகக் கடமையாற்றவும், சபாநாயகர் பிரதம மந்திரியாகக் கடமையாற்றவும் வழிசெய்யும் திருத்தம் ஒன்றும் இதில் அடங்கும்.

### கண்காணிப்பு ஆணைக்குழு

அரசமைப்பு சட்டம் சரியாக செயல்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கவும், வழிநடத்தவும் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படவிருப்பதாக தேசிய அரசுப் பேரவையில் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அறிவித்தார், அரசமைப்புச் சட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் 137 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

### செப்டம்பர் 7-ந் திகதி சத்தியப்பிரமாணம்

புதிய அரசமைப்பின்படி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன செப்டம்பர் 7ந் திகதி தேசிய அரசுப்பேரவையில் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்வார் என்று நேற்றுப் பிரதமர் மந்திரிசபையில் அறிவித்தார்.

அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் 157வது ஷரத்து அமைந்திருப்பதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கமைய அந்த ஷரத்து அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்படுவதாகவும் பிரதமர் அறிவித்தார்.

அரசமைப்புச்சட்டத்தின் பிரிவுகள் அனைத்தையும் பிரதம மந்திரி சிங்களத்தில் வாசித்து விளக்கினார். நீதியமைச்சர் அதனை ஆங்கிலத்தில் நிகழ்த்தினர்.

நீதியமைச்சர் திரு. தேவநாயகம் குழுநிலைவிவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது இந்த அரசியல் சட்டம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது என்றும், சோல்பரி அரசியல் திட்டத்தில் அளிக்கப்பட்ட சலுகைகளை விட கூடுதலான சலுகைகளை அவர்கள் பெறுகிறார்கள் என்றும் சொன்னார்.

இந்த விவாதத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மஸ்கேலியா - நுவரெலியா தொகுதி மூன்றாவது உறுப்பினருமான திரு. எஸ் தொண்டமான் பேசுகையில் சிலவிடயங்களில் எனக்குக் கருத்துவேறுபாடுகள் உண்டு. ஆனால் கடந்த நாற்பது வருடங்களாக நாம் போராடி வரும் லட்சியங்களில் சில இச்சட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன என்றார்.

### பிரதமர் நன்றி

விவாதத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பிரதம மந்திரி திரு. பிரேமதாச நன்றி தெரிவித்துப் பேசுகையில் மக்களின் உண்மையான இறைமையை இவ்வரசமைப்புச் சட்டம் நிலைநாட்டுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்கும் வழிவகுக்கின்றது என்றார்.

பேரவை மீண்டும் செப்டம்பர் 6ம் திகதி கூடும்.

## பேராயர் விஜயம்

(இளவாலை)

கொழும்பு மறைமாவட்டப் பேரருட்திரு. நீ. மார்க்கஸ் பர்னாந்து, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கல்லூரி அதிபர் அருட்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார் பேராயரை வரவேற்றார்

ஈற்றில் பேராயர் ''எமது தாய் நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்கள் ஒருபகுதியார் மறுபகுதியாரைப் பரஸ்பரம்நம்பி, ஒருவர் ஒருவரை நேசித்து அன்புடன் வாழவேண்டுமென்றும், அதற்காகவே இயேசுக்கிறிஸ்துநாதர் இப்பூவுலகுக்கு வந்தாரென்றும்'' குறிப்பிட்டு, எல்லோருக்கும் தமது ஆயர்நிலை ஆசிகளையும் வழங்கினார்கள். (இ)

## கருணாநிதி சிலை

பற்றிய விவகாரம்

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியின் சிலையை அகற்றும்படி கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு வாபஸ்பெறப்படவில்லையென்று அ. தி. மு. கழக தலைமைச் செயலக சட்ட அதிகாரி அறிவித்துள்ளார்.

இந்த மனுமீதான திருத்த மனுவொன்று மாத்திரமே விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அசல் மனுமீது இன்னும் விசாரணை ஆரம்பமாகவில்லையென்று அவர் கூறியுள்ளார்.

## படிப்பறிவில்லாதவர்கள்தான் கூட்டணியை ஆதரிக்கிறார்களாம்

### சன்சோனி கமிஷன்முன் சாட்சியம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்பவர்கள் படிப்பறிவில்லாதவர்கள்என்று நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த யாழ். மாட்டின்வீதியைச் சேர்ந்த பொன்சேகா என்பவர் கூறினார்.

ஆகஸ்ட் கலவரம் பற்றிய சன்சோனி விசாரணைக் கமிஷன்முன் சாட்சியமளித்த இவரை சிங்கள இளைஞர் முன்னிலையில சட்டத்தரணி ஹரிச்சந்திர விஜேதுங்கா குறுக்கு விசாரணை செய்தார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன யாழ்ப்பாணத்தில் கலந்து கொள்ள வந்தபோது யு. என். பி. கூட்டத்தை ஏற்பாடுசெய்தவர்களில் நானும் ஒருவன், அந்தக்கூட்டத்தில் பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர். பலர் தமிழர்களாய் இருந்தனர். ஐக்கியதேசியக் கட்சி ஐக்கிய இலங்கையை வலியுறுத்தும் கட்சி. இதை வலியுறுத்துவதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களே அந்தக் கூட்டத்தைக் குழப்பினார்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்பவர்கள் படிப்பறிவில்லாதவர்கள், இவர்களைப் படித்த படிப்பாளிகள் தவறான வழியில் செலுத்துகிறார்கள்.

ஒரு கட்டத்தில் சட்டத்தரணி விஜயதுங்க, 'ஈழநாடு' பத்திரிகையைக் காட்டி, இப்பத்திரிகையைத் தெரியுமா? என்று கேட்டார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கான சட்டத்தரணிதிரு. சண்முகலிங்கம் குறுக்கிட்டு அவருக்கு அதை வாசிக்கமுடியாது என்றார்

இது பற்றி வேறொரு தடவை விசாரிப்பதாக விஜயதுங்கா கூறினார்.

திரு. பேர்ஸி விஜயதுங்கா சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தபோது ''யாழ்ப்பாணத்திலிருந்த பங்குக்குருவானவர் தங்களுக்கு எதுவித உதவியும் செய்யவில்லையென்றும் தாங்களும் அவரிடம் செல்லவில்லையென்றும் சொன்னார். அவர் தமிழராய் இருந்ததால் இப்படி நடந்துகொண்டாரென்றும், சிங்களச் சாமிமார் அப்படி நடப்பதில்லையென்றும் சொன்னார்.

சண்முகலிங்கம், முகத்துவாரம், வத்தளை ஆகிய இடங்களில் தமிழில் பூசை நடத்தச் சிங்களச் சாமிமார் மறுத்துவிட்டது தெரியுமா? என்று கேட்டார். சாட்சி தெரியாது என்றார்.

கலவரத்துக்கு முதல் நாள் தாம் 4 தடவை வீட்டுக்கும், கடைக்கும் போய்வந்ததாகவும், பொலிசார் எவரையும் தாக்கவில்லையென்றும் சாட்சி கூறினார்.

16ந் திகதி தமது கடை கொள்ளையடிக்கப்பட்ட பின் குண்டு வீசப்பட்டதென்றும் கூறினார். பொலிசார் துரத்தி வந்தபோது வெடிச்சத்தம் கேட்டது என்றும் ஒருவர்விழுந்தார் என்றும் சாட்சி கூறினார். ஒருவர் விழுந்தாரா என்று திரு. சண்முகலிங்கம் கேட்டபோது இல்லை என்றார்.

16ம் திகதி 12மணிக்கு விகாரைக்குப்போனதாக சாட்சி கூறினார். அங்கு பொலிசார் இருந்ததுபற்றியும் கூறினார். விகாரையைத்தாக்க ஏராளமானவர்கள் வந்தனர் என்றும் எவ்வளவுபேர் என்று கேட்க ஒரு லட்சம்பேர் என்றார். பிறகு உள்ளே இருந்தவர்களைத் தாம் கூறியதாகச் சொன்னார்.

சாட்சி கமிஷனுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் பதிவு எண் இல்லாதது பற்றி திரு. சண்முகலிங்கம் குறிப்பிட்டபோதுஅக்கடிதம்தமக்குயாழ்ப்பாணத்திலிருந்து கமிஷனில் பணிபுரிந்த திரு. சில்வாவால் தமக்கு அனுப்பப்பட்டதாக சட்டத்தரணி கூறினார். சாட்சியிடம் கேட்டபோது தாம் கொழும்புக்குத் தபாலில் அனுப்பியதாகக் கூறினார், கொழும்புக்குத் தபாலில் வரும் கடிதங்கள் யாவும் பதியப்படுவதாக கமிஷனர் கூறினார், இந்த விஷயத்தைக் கவனத்திற்குக் கொள்ளும்படி திரு. சண்முகலிங்கம் கமிஷனரிடம் கேட்டுக்கொண்டார். (ம)

யாழ். மானிப்பாய் வீதியில்

## வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு கைக்குண்டு வீசப்பட்டதால் வீடொன்றின் முற்பகுதி பலத்த சேதமடைந்தது. குண்டுவெடித்ததால் ஏற்பட்ட சத்தம் சுமார் ஒருமைல் சுற்றளவிற்குக் கேட்கக்கூடியதாக இருந்ததாம்,

யாழ். உதவிப்பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா நேற்று அதிகாலை சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று நேரில் பார்வையிட்டார்.

யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள கந்தசாமி ஞானப்பிரகாசம் என்பவரின் வீடே சேதமடைந்ததாகும், முன்கதவு பெயர்க்கப்பட்டு உள்பக்கம் வீசப்பட்டிருந்தது.

சம்பவத்தை தொடர்ந்து இருவர் ஓடியதாகவும், ஆனால் அடையாளம் காணப்படவில்லையென்றும் பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சவர்லெட் கார் எஞ்சின் ஹெட் றேடியேட்டர் டிப றெஞ்சர் கியர்பொக்ஸ் முதலியன விற்பனைக்குண்டு. கணேஸ் ஸ்ரூடியோ, லேக், மட்டக்களப்பு. 0054

### தேவை

அனுபவம் வாய்ந்த 30—40 வயதிற்குட்பட்ட (செக்கியூரிட்டி கார்ட்) தேவை. தகைமைகளுடனும், அடையாள அட்டையுடனும் நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர் உரிமையாளர், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0069



## நன்கொடை வேலைகள் 1978

### கட்டைவேலி கிராமசபை

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1978-ம் ஆண்டு ஆவணி மாதம 30-ந் திகதி காலை 9-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். 1978-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்களை கந்தோர் நாட்களில் நேரில் வந்து அறிந்துகொள்ளலாம்.

1. வியாபாரிமூலை திக்கம் வீதி
2. வல்லிபுரக்கோவில் வீதி
3. கிளானை அல்வாய் வீதி
4. மடத்துக்கடவை சங்கக்கடை வீதி
5. துன்னாலை தெற்கு கோவில்கடவை கொள் வெளி வீதி
6. துன்னாலை தெற்கு பிட்டியன் சுடலை வீதி

**ஆ. குணநாயகம்.**
விசேட ஆணையாளர்,
கட்டைவேலி கிராமசபை.

கிராம சபை அலுவலகம்,
அல்வாய்,
14-8-78. 0076



## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல 84 அ — பிரிவுகள் 524, 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சிவகுரு மகாராசா என்பவரின் மரணசாதனத்தின்/மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மகாராசா கைம்பெண் மனோன்மணி "மகாபவனம்", உடுவில், சுன்னுகம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்

இல. தத்துவ வழக்கு: 12

1. மகாராசா மகாசித்திரா
2. மகாராசா மகாநேரு
3. மகாராசா மகாமெனன்
4. மகாரர்சா மகாவேந்தன்
5. மகாராசா மகாதரன்
6. மகாராசா மகாதரிசினி எல்லோரும் பராயமடையாதவர்கள் உடுவில, சுன்னுகம்.
7. செல்லையா கந்தையா சுன்னுகம் மேற்கு, சுன்னுகம்

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில தொடுக்கப்பட்டு அதில அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**றிச்சட் ஜெயராசசிங்கம்,**
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 0053



## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B/14651

1. அவுரும்பிள்ளை சூசைப்பிள்ளை கைம்பெண் பிருன்சீஸ்கம்மா — முல்லைதீவு

வழக்காளி

எதிராக

1. பாவிலு பிலிப்பும் (காலம்சென்றவர்) பெண்
2. செல்லம்மாவும் இல. 362, பாங்செல் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/14651-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1978-ம் ஆவணி மீ 23-ம் வ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 9400/-ம் 27-11-74 தொடக்கம் 10-11-75 வரைக்கும்ரூபாய் 5000/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 454-85ம் இதில் தீர்வைத் தொகையில் ரூபா 1000/-மும் செலவில் ரூபா 450/-ம் நீக்கி

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை "குடியிருப்பு" பரப்பு நிலை இலாச்சம் இரண்டு குளி இரண்டு (பர. நிலை 2 குளி 2) இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ரோட்டு, மேற்கு பொன்னையா பெண் சின்னம்மாவின் ஆதனம், தெற்கு பூதர் தம்பிப்பிள்ளையினம் இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும் சொரியலாய் அரைவாசி (½)

**ஜே. ஏ. எட்வேட்,**
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
-8-78. 0077


## எல்லாத்துறையிலும் வெற்றி பெற்றுர்



ஆயிரம் பிறைகண்டவர் ஆஜானுபாகுவான தோற்றம் உறுதிமிக்க உரையாடல் எல்லாரும் வாழவேண்டும் என்னும் நோக்கு இவையாவுப் பொருந்திய சமூகநலத் தலைவராக விளங்கியவர். நீராவியடி திரு.சி. சின்னத்துரை ஜே. பி. அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைநெறிஎன்றும் போற்றத்தக்கது. பொன் எழுத்திற் பொறிக்க வேண்டியது.

1897 ஆம் ஆண்டு சுன்னுகத்திலே பிரபலவர்த்தகர் திரு. சிற்றம்பலம் சின்னத்தம்பி தம்பதிகளின் மூத்த புதல்வராகத்தோன்றி மல்லாகம் இந்துக்கல்லூரியிலேயே உயர்தரக்கல்விகற்று 1916 ஆம் ஆண்டு மலேசியா சென்றுர் அங்கு ஸ்ரேசன் மாஸ்டராகக் கவுண்ரிங் ஈப்போ சிமோர் பினுங் ஆகிய நகரங்களில் கடமையாற்றினுர். அக்காலகட்டத்திலே மலாயாவாழ் இலங்கையருக்கும் ஏனையோருக்கும் சமய சமூக பொதுநலத்தொண்டுகளைச் செய்து எல்லோரது அன்புக்கும் பாத்திரமானுர்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மறையும் வரை அன்னுரது வலக்கரமாக இவர் விளங்கினுர். முக்கிய தீர்மானங்கள் அபேட்சகர் தெரிவு மாநகரசபைத்தேர்தல் முதலியவற்றில் இவரது ஆலோசனைகள் முதல்இடம் பெற்றன. இதனுல் இவரது இல்லம் அரசியல் சமூக சேவைக்குரிய கலங்கரை விளக்கமாயிற்று.

சமாதான நீதவானுக இவர் எல்லா நெருக்கடி நிலையிலும் சமாதானத்தை நிலைநாட்டும் கர்மவீரராக விளங்கினுர். மக்கள் குழுத்தலைவராக விளங்கிய இப்பெரியார் கூட்டுறவு இயக்கமூலம் பொது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்ததொண்டாற்றினுர். நீராவியடி கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குநர் சபைத்தலைவராக நெடுங்காலம் விளங்கினுர்.

வாழ்க்கையில் ஒருதுறையில் வெற்றிபெற்ரோர் மற்றொரு துறையில் தோல்வி அடைவதுண்டு. ஆனுல் இவர் வாழ்க்கையின் எல்லாத்துறையிலும் வெற்றி பெற்றுர் இவருக்கு இவ்வாழ்க்கையிலே இவரது பாரியார் என்றும் துணைபுரிந்தார். இவருடன் 50 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த முதலாம் ஆண்டு திதியைக் கொண்டாட இருந்தவேளையில் அம்மையாரையொற்றி இவரும் இறைவன்பாதத்தை அடைந்தா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெறுவர்" என்னும் வள்ளுவன் திருவாக்கினை மெய்மெ ழியாக்கிய பெரியார் வாழ்ந்து காட்டிய வழியிலே நாமும் வாழ்வோமாக! அதனுல் வையவாழ்வே தெய்வ வாழ்வாகிவிடும்.

வித்துவான்
ச. [illegible]ணவதிப்பிள்ளை பி. ஏ
நினைவுநாள் 16- . 78

## லட்சரூபா லஞ்ச வழக்கு: முறைப்பாட்டுக்காரர் மரணம்

(கொழும்பு)

லட்சரூபா லஞ்ச வழக்கில் முறைப்பாட்டுக்காரர் மரணமாகிவிட்டதால் அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசிப்பதற்காக வழக்குஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த இவ்வழக்கில் உதவி செலாவணி கட்டுப்பாட்டதிகாரி கே. ஜே. ஸ்ரான்லி பீரிஸ், திருமதி பி. டி. துல்வெல, பி. வி. வி. தயூடீன் ஆசியோர் சட்டத்தரணி ஜி. டி. விஜயசேகராவிடம் லட்ச ரூபா லஞ்சம் கோரியதாகவும் 1ம் எதிரி 25,000 ரூபா வாங்கியதாகவும் மற்றையோர் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரமும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ. ஸி.யும், 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலமும் (ஜூனியர்) ஆஜரானுர்கள். (க-அ)

## "விவசாயிகள் சலுகை இழக்கக்காரணம் என்ன?"

### உடுப்பிட்டி எம். பி. விளக்கம்

(உடுப்பிட்டி)

"அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பில்லாமல் இருப்பதாலேயே விவசாயிகள் பல சலுகைகளையும், முன்னேற்றத்தையும் இழக்க நேரிடுகின்றது".

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் வடமராட்சி விவசாய விஸ்தரிப்புத் திட்டக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். புலோலி மெதடிஸ்தமிஷன் மகாவித்தியாலயத்தில் திரு. சிவ.முத்துலிங்கம் தலைமையில் கூட்டம் நிகழ்ந்தது. திரு. த. இராஜலிங்கம் எம். பி. தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது:

எமது நாட்டின் பொருளாதாரம் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. நாம் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் விவசாயம் மூலமே பொருளாதாரத்தில்முன்னேற்றம்காணமுடியும். இதனுலேயே அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கெனக் கூடுதலான பணத்தை ஒதுக்கியுள்ளதுடன் பலஅபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்தின் செயற்திட்டங்களை விவசாயிகளுக்கூடாகவே மேற்கொள்ள முடியும். விவசாயிகளின் உற்பத்திச் செலவுகளைக் குறைத்து அவர்களின் உச்ச இலாபத்தைக் கூட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். நாம் மூலதனத்தின் அளவையும், நிர்வாகத்தையும் விரும்பியபடி மாற்றலாம். ஆனுல் நிலத்தின் அளவு மாற்றஞ்செய்யப்படக் கூடியது அல்ல. எனவே நிலத்தின் வளத்தைப்பெருக்கி உற்பத்தியைக் கூட்டமுயலவேண்டியது அவசியம். (உ)

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 1-ந் திகதி
புதன்கிழமை
(17-8-78)

**மேடம்:-** நீண்டநாள் பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

**இடபம்:-** இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக் கலைஞர்களுக்கு நட்புகள் உண்டு. பொன்னுன தினம்.

**மிதுனம்:-** கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம்இடம் பெறலாம். தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் மன் யோசனை விரும்பத்தக்கது.

**கடகம்:-** வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர்த்தவர்களே ஆதரவுதருவதற்கு முன்வருவாகள் களஸ்திரவழியாலும் நன்மைகள் சேரும். காதலர்களுக்கு இனிப்பான தினம்.

**சிங்கம்:-** அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில்மாட்டி வைக்கும். உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக் கூடும், அடக்கம் வேண்டும்.

**கன்னி:-** தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். நினைத்ததைச்சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**துலாம்:-** உற்சாகமான தினம். உறவினர்கள் பச்சைக் கொடிகாட்டுவார்கள். புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள். இடமாற்றமொன்றுக்கும் முயற்சி மேற்கொள்ள[illegible]டும்.

**விருச்சிகம்:-** இரக்க சிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சிலர் வேதா[illegible]த விவகாரங்களில் ஈடுபடுவா[illegible]கள். கண்ணியமான [illegible].

**தனுசு:** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. புதிய முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணத்தை பின்போடுவது விரும்பத்தக்கது.

**மகரம்:-** கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். எதிலும் ஏமாற்றம் தென்படும். எதிலும் அடக்கத்துடனும், நிதானத்துடனும் இருக்கவும்.

**கும்பம்:-** குடும்பத்தில் குதூகல நிகழ்சிகள் இடம் பெறும். பணவரவுக்கும் இடமுண்டு. உடல்நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு.

**மீனம்:-** குடும்பக்கவலை தலைதூக்கும். பிதாவழிப் பிணிக்கும் இடமுண்டு. அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும். பண விவகாரத்தில் அபிப்பிராய பேதங்கள் உருவாகும். சுமாரான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கலாசோதி ஒன்றிய சிவயோக முனீஸ்வர ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 21-ந் திகதி ஆரம்பமாகும்.

அன்றைய தினம் சிவத்தமிழ்க் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'மகாகும்பாபிஷேக மகிமை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதினகர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளின் உபந்நியாசமும் சிறந்த வித்துவான்களின் தவில் கச்சேரியும் இடம்பெறும்.

## ஈழநாடு
The Eelanaadu

### 'ராக்கிங்'

'ராக்கிங்' என்ற பெயரில் நமது நாட்டில் பல்கலைக்கழக வளாகங்களில் நடந்த அக்கிரமங்கள், அட்டூழியங்கள்பற்றி சில வருடங்களுக்குமுன் விசாரணை செய்த கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தபோது நாட்டுமக்கள் அனைவருமே அதிர்ச்சியடைந்தனர்.

'ராக்கிங்' என்ற வார்த்தையை உபயோகிப்பதே பெரிய பாபம் என்று மக்கள் கருதினர்.

அன்றைய அரசாங்கம் பல்கலைக்கழக வளாகங்களில் 'ராக்கிங்' செய்வதற்குத் தடைவிதித்தது. இதில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்தது.

'ராக்கிங்' தடைசெய்யப்படுவதையும் ராக்கிங்கில் ஈடுபடுபவர்மீது கடும் நடவடிக்கை எடுப்பதையும் சகல அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் வரவேற்றனர்.

ஆனாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வளாகங்களில் ராக்கிங் நடைபெற்றன. பல்கலைக்கழக நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுத்து இப்போது தென்னிலங்கையிலுள்ள வளாகங்களில் பொதுவாக 'ராக்கிங்' நிறுத்தப்பட்டுவிட்டதென்றே சொல்லலாம்.

ஆனால் பண்பாடுபற்றிப் பெருமையாகப் பேசப்படும் யாழ்ப்பாணத்திலுள்ள வளாகத்தில் சில தினங்களுக்குமுன் 'ராக்கிங்' என்ற பெயரில் நடந்த நிகழ்ச்சிகளையிட்டுத் தமிழ் மக்கள் தலைகுனிய வேண்டியுள்ளது.

வளாகத்துக்குள்ளேமட்டுமல்லாது பஸ்நிலையத்திலும் பஸ்தரிப்பு நிலையங்களிலும் ஏன், மாணவ மாணவியர் தங்கியுள்ள தனியார்விடுதிவரைக்கும்கூட இந்த 'ராக்கிங்' பரவியிருக்கிறது.

கைதடியில் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவபீடத்தில் சேர்ந்த மாணவ மாணவியரை 'ராக்கிங்' என்ற பெயரில் கொடுமை செய்தவர்கள் மீது வளாக நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்த நடவடிக்கைகள் மட்டும் போதுமானதாகத் தெரியவில்லை.

பாகிஸ்தானில் இப்போது சில குற்றச்செயல்களுக்குப் பகிரங்கமாகக் கடும் தண்டனை வழங்கப்படுகிறது.

மத்தியகிழக்கு நாடுகளிலும் இப்படிப் பகிரங்க தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இதனால் அந்த நாடுகளில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிலவுகிறது.

கம்யூனிஸ்ட் நாடுகளில் 'ராக்கிங்' என்ற பேச்சுக்கு இடமில்லை. மேல்நாடுகளிலும்கூட 'ராக்கிங்' என்ற பெயரில் இப்படியான காடைத்தனங்கள் நடைபெறுவதில்லை.

யாழ்ப்பாண வளாகம் தரத்தில் வேறு எந்த வளாகத்துக்கும் குறைந்ததல்ல.

இதனால் வளாகத்தின் தரத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல வளாகத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றையும் நிலைநாட்டி அதன் நற்பெயரையும் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

வளாகத்தில் உயர்கல்வி கற்கச் செய்பவர்கள் இந்நாட்டின் நாளைய தலைவர்கள். உயர்ந்த பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் அவர்களிடம் நாடு எதிர்பார்க்கிறது.

இதற்குமாறாக 'ராக்கிங்' என்றபெயரில்கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுபவர்கள் வளாகத்தினுள் கால் வைப்பதற்கே தகுதியற்றவர்கள். இவர்கள் மீது வளாக நிர்வாகம் தடவு தாட்சண்யமின்றித் தயங்காது கடும் நடவடிக்கை எடுப்பதை யாருமே ஆட்சேபிக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

# "தெரிவுக்குழுவில் கூட்டணி ஏன்கலந்துகொள்ளவில்லை?

## பேரவை உரையில் 'அமிர்' விளக்கம்

புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக ஆராய்ந்துசிபார்சு செய்வதற்கென நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கம் வகிக்க மறுத்ததற்கான காரணத்தைபேரவையில் உரை நிகழ்த்துகையில் விளக்கிக் கூறிய திரு. அமிர்தலிங்கம் இது சம்பந்தமாக செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தையும் வாசித்தார். அத் தீர்மானம் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழ்ஈழ விடுதலையைக் காண்பதே இலட்சியமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட காரணத்தினாலும்-

தேர்தலின் பின்னர் இந்நாட்டில் நடந்துமுடிந்த வன்முறைச் சம்பவங்கள் தமிழ் ஈழ இலட்சியம் தவிர வேறு எதுவும் இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பையும் நல்வாழ்வையும், தரமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதாலும்-

வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதையொட்டி, அரசும் அதன் நிர்வாக யந்திரமும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதனாலும்-

தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பையும், அதன்பின் நாட்டில் நடந்த சம்பவங்களின் தாக்கத்தையும், கருத்துக்கு எடுத்து, தமிழ் தேசிய இனத்தின் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்ற ஆர்வமும் அவசரமும் அரசுக்கு இருப்பதாகத் தோற்றாதபடியாலும்-

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில்தானும் அரசியல் அமைப்பைத் திருத்தி அமைப்பதற்கு முன்பு சர்வ கட்சிகளின் சம்மதத்தைப் பெற்று தமிழ்பேசும் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படாதபடியாலும் இச்சூழ்நிலையில் அமைக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக் குழுநாட்டிலுள்ள இரு தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்னையைத் தீர்ப்பதற்கேற்ற நடவடிக்கை எடுக்கும் தகுதியோ, சூழ்நிலையோ இருப்பதாகத் தோற்றாதபடியாலும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பைமாற்றிஅமைப்பதற்கான தெரிவுக்குழுவில் கலந்துகொள்வதில் எவ்வித பயனுமில்லையென்று நடவடிக்கைக்குழு கருதி அக்குழுவில் கலந்து கொள்ளவேண்டாமென்று பாராளுமன்றக் குழுவைப் பணிக்கிறது.''

எங்கள் கட்சிக் குழுவின் இந்தப் பணிப்புரையின் அடிப்படையில் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதிலிருந்து விலகிக் கொண்டோம்.

தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மகஜர்கள்கோரப்பட்டன. பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டிராதஆலோசனைகளும் தெரிவுக்குழு அங்கீகரிக்காத சில ஆலோசனைகளையும் கொண்ட ஒருநகல் அரசியலமைப்பு மசோதாவை இப்பேரவையில் சமர்ப்பித்திருப்பதனால் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது எதற்காக என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இந்தத் தெரிவுக்குழு இல்லாமலே தங்களுக்குள்ள பெரும்பான்மைப்பலத்தைககொண்டு தங்களுடைய சொந்த அரசியலமைப்பைத் தயாரித்து அளித்திருந்தால் அது மேலானதாக இருக்கும்.

அரசியலமைப்பில் அந்தப் பகுதி அல்லது தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்படாத அரசியலமைப்புமசோதாபற்றி நான் முன்னரே எனதுதமிழ்ப் பேச்சில் எடுத்துக் கூறிவிட்டேன். மீண்டும் அதுபற்றி நான் பேசவிரும்பவில்லை. ஆயினும் அதுபற்றி ஒன்றைக்கூற விரும்புகிறேன்.

இந்த அரசியலமைப்பில் மக்களை மிகவும் குழப்பும் அம்சம் 157-வது ஷரத்தில் அடங்கியிருப்பதாகும். இதுஇரண்டு விதமான நிலைமைக்குப் பிரதானமாகத் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. முதலாவதாக புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் உதாரணமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிபோன்ற இதர அரசியல்கட்சிகள் தாங்கள் அரசியல் நிர்ணய சபையாக மாறுவதற்கு மக்களிடம் கட்டளை பெறுவதை இது தடைசெய்ய முனைகிறது.

[தொடரும்]

### "வடபகுதியில் உள்ள
## மலையக அகதிகளுக்கு நிதி உதவுக"
### பரு. எம். பி. கோரிக்கை

(பருத்தித்துறை)

''தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் தினமும் பத்து சதத்தையேனும் ஒதுக்கி அதனை அகதிகள் மறுவாழ்வுக்கு உதவி அளிப்பதற்காக அனுப்பிவைத்தல் வேண்டும்'' எனப் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைத்தினம் பருத்தித்துறை பன்னைக்கட்டை உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் மூன்றுவது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினர்.

செல்வன் கு. பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. க. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஆகஸ்ட் கலவரத்தின்போது பாதிப்புக்குள்ளான 1500 மலையகக் குடும்பங்கள் வடபகுதிக்கு குடிபெயர்ந்துள்ளன. இக்குடும்பங்கள் வாழ வழியற்று வடக்கில் இருந்து வருகின்றன

இக்குடும்பங்களுக்குவளமான வாழ்வு அமைத்து கொடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் தலையாய கடமையாகும், இக்கடமையை நிறைவேற்ற ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் நாளுக்குப் பத்து சதவீதம் ஒதுக்கிக்கொடுக்கும்படி வேண்டுகின்றேன்.''

இவ்விழாவில் ஆசிரியர் இராமசாமி உட்படப் பலர் உரையாற்றினர். விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு திரு. துரைரத்தினம் பரிசில்களை வழங்கினர். (உ)

### ஆட்சேபம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி சுகாதார காரியாலயம், இடமாற்றப்பட விருப்பதை சாவகச்சேரிகிராம சபையினர் ஆட்சேபித்துள்ளனர்.

### மணிவாக்கு

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாத மக்கள்மத்தியிலே பிரச்னைகள் அதிகமாக ஏற்படுகின்றன.

—கென்னடி



### எங்கள் வினை தீர்ப்பாய்

சூரபன்மன் எனுமவுணன் தனையழிக்கத்
துணிவுடனே வாரியிடை மறைவான்தன்னைக்
கூருடைய வேல்வாங்கி அவன்தன்மேனி
குலைவுமிரு கூறுக்கி நின்றபோது
நேருடனே வருமயிலின் மீதிலேறி
நிமிர்கோழி யதனையுமே கொடியேயாக்கி
ஏருடனே வருமெங்கள் நல்லூர்க் கந்தா!
எங்கள்வினை தீர்த்தருள வருகுவாயே.

வேலேந்தி வருகின்ற கந்தவேளே!
விண்ணவர்கள் சிறைமீட்ட வெற்றிவீரா!
பாலேந்தி அபிஷேகம் புரியவந்தோம்
பண்பாரும் நல்லைநகர் குடிகொள் தேவே!
நூலேந்து பிரமாவின் சிரம் குலுங்க
நோக அவனைக்குட்டிச் சிறையும் வைத்தாய்!
மாலேந்து நெஞ்சினிருள் அகற்றிநல்ல
மருவுபெரு வாழ் வெமக்கு நல்குவாயே!

-'-- நீர்வைப் பண்டிதர் நீ. சி. முருகேசு

## நாடும் நடப்பும்

கியூபாவில் வீதிகளிலும், சந்திகளிலும் நின்றுஅரட்டை அடிப்பவர்களையும் வீண்பொழுது போக்குபவர்களையும் தேடித்திரிந்தாலும் காணமுடியாது என்கிறர் கியூபாவில் நடந்த உலக இளைஞர் மகாநாட்டுக்குச் சென்று திரும்பிய உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன்.

எங்களுக்கு இரவு ஒன்பது மணிக்குத்தான் கியூபாவில் பொழுதுபடுகிறது. காலைஐந்து மணிக்குப் பொழுது புலர்கிறது. பகலில் உழைத்தவர்கள் இரவு ஒன்பதுமணிக்குப் பின்னர்தான் ஓய்வுபெறுகிறர்கள். ஒன்பது மணியிலிருந்து பன்னிரெண்டு ஒருமணிவரை சந்திப்புகள், மதுபானம்அருந்துவது, பின்னர் உணவு உண்டு படுக்கைக்குச் செல்கிறர்கள். காலை ஐந்துமணிக்கு எழுந்து தங்கள் கடமையைச்செய்யத்தொடங்குகிறர்கள். ஆக இரவில் கியூபா மக்கள் நான்கு ஐந்து மணிநேரமே உறங்குகிறர்கள். கட்டுப்பாடான வாழ்க்கை, கடினஉழைப்பு. வீண்பொழுது போக்குபவர்கள் எவருமில்லை.

இப்படிக் கூறியகவிஞர்காசி இப்படி நமதுநாடு இந்தயுகத்தில் மாற்றம்பெறுமென்றுகூட எதிர்பார்க்க முடியாமலிருக்கிறது என்று அங்கலாய்த்தார்.

கியூபாவிலிருந்து வரும்பொழுது சோவியத்யூனியனிலும் ஒருநாள் தங்கினராம். பல இடங்களுக்கும் கவிஞர் காசியையும் அவருடன் சென்றவர்களையும் அழைத்துச் சென்று காட்டினர்களாம்.

தங்களை அழைத்துச்சென்ற வழிகாட்டி ஒரு இடத்தில் ஒரு தேவாலயத்தைக்காட்டி அந்தத் தேவாலயத்தின் பெயரையும் கூறியபின் ''திஸ் இஸ் ஃபங்ஷனிங்'' (இது இயங்குகிறது) என்று சொன்னபோதுதான் ஒரு மாதிரியாக இருந்ததென்றர்.

கியூபாவில் விலைவாசி அதிகம், செலவும் அதிகமாம். ஒரு தொலைபேசி அழைப்புக்கு எங்கள் நாட்டுப்பணத்தில் நூற்றிஐம்பதுரூபாய் செலுத்தவேண்டுமாம்.

கியூபா மகாநாட்டில் ஒருவர் நிகழ்த்திய உரையை உடனுக்குடன் ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதென்றும் கவிஞர் காசி சொன்னர்.

எங்கள் பிரச்னைகள் அங்கு வந்த பிறநாட்டுப் பிரதிநிதிகள் பலருக்குத் தெரியாது. இதற்கு கவிஞர் சொன்ன காரணம்.

நாங்கள் எங்கள் பிரச்னைகளை வெளிநாடுகளுக்கு ஆங்கில மொழிமூலம்தான் வெளிப்படுத்துகிறேம். ஆங்கிலம் உலகம் முழுவதும் எல்லா மக்களும் தெரிந்த மொழியல்ல. கியூபா மகாநாட்டுக்கு வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபு மொழிகள் தெரிந்தவர்களே! எனவேதான் நாங்களும் இந்த மொழிகளையும் படிக்க வேண்டியது அவசியம் என்கிறர் கவிஞர் காசி

ஃ ஃ ஃ

எத்தனை மொழிகளைப் படித்தாலும் அறிவுக்கு விருத்திதான். பயனும் நிறையவுண்டு.

--ஊர்சுற்றி

### கந்தரனுபூதி பாராயண வழிபாடு

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் உற்சவத்தில் நல்லூர் நாவலர் சபை ஆதரவில் சபை முன்றலில் தினமும் மாலை 5 மணிக்கு பண்ணிசைக்கலாநிதி எஸ். கே. சிவபாலன் தலைமையில் கந்தரனுபூதி பாராயணக் கூட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது. (அ)

# வட இந்தியாவில் மீண்டும் பெருவெள்ளம்

## உ. பி. யில் மட்டும் 231 பேர் பலி

### கர்நாடகம், ஆந்திராவில் நதிகள் பெருகும் அபாயம்

புதுடிலலி, ஆக. 16

வடஇந்திய மாநிலங்களான உத்திரப் பிரதேசம், பீகார் ஆகிய இடங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாக ஆறுகள் உடைப்பெடுத்தோடும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**231 பேர் பலி**

உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 231 பேர் வெள்ளத்திற்குப் பலியாகியுள்ளனர். இம் மாநிலத்தில் உள்ள 39 மாவட்டங்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளன.

பீகாரில் வெள்ளப் பெருக்கினுல் பல மண்சரிவுகள் ஏற்பட்டதாகவும் லட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஹிமாசல் பிரதேசத்தில் இதுவரை 62 பேர் வெள்ளத்திற்குப் பலியாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

ஒரிஸாவிலும் பலத்த மழையை அடுத்து ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

**தென் மாநிலங்களில் நிலைமை மோசம்**

தென் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் பெருமழையை அடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கிருஷ்ணு, கோதாவரி ஆகிய நதிகள் பெருக்கெடுகக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஹைதராபாத்திலும் கடந்த இரு நாட்களாக தொடர்ந்து பெருமழை பெய்துவருகிறது. (இ)

---

### 1-ம் திகதிகளில் மதுவிற்பனை இல்லை

சென்னை, ஆக 16

கர்நாடக மாநிலத்தில் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதிகளில் மதுவிற்பனை செய்யக்கூடாது என மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. தீவிரமதுவிலக்கை அமுல் செய்வதன் முதற்படியே இது என அரசு அறிவித்துள்ளது. (இ)

---

### கோஷ்டி கைகலப்பு

புதுடில்லி, ஆக 16

மகராஷ்டிர மரநிலத்தில் உள்ள சோழாப்பூரில் இடம்பெற்ற கைகலப்பினுல் 4 பொலிஸார் உட்பட 9 பேர் காயமடைந்தனர். கைகலப்பில் ஈடுபட்டவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செயதனர். (இ)

---

### வசாவிளான் பூசாரி கொலை: சந்தேகநபர்களுக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

வசாவிளான் கோவில் பூசாரி கொலை தொடர்பாக றிமாண்டிலிருந்த இரு சந்தேக நபர்களும் தலா 750 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வசாவிளானைச் சேர்ந்த வன்னியர் கோவில் பூசாரியான எம். வல்லிபுரம் என்பவர் கடந்த ஜூன் மாதம் 16ம் திகதி மரணமான நிலையில் அவர் பூஜை செய்த கோவிலினுள் கயிற்றில் தொங்கியதும் அது குறித்து நடந்த மரணவிசாரணையில் இது ஒரு கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டதும், இது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வசாவிளானைச் சேர்ந்த எஸ். குணபாலசிங்கம், என். சத்தியசீலன் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் றிமாண்டில் வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

கடந்த தவணையின் போது இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களைப் பிணையில் விடுமாறு அவர்களது சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரிய போது மேற்படி காலமானவரின் உடலைப் பரிசோதித்த வைத்திய அதிகாரி, அவரது வயிற்றில் நஞ்சு கலந்த சோறு இருந்ததாகவும், அதுவே மரணத்துக்குக் காரணமெனவும் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தமையால் காலமானவருக்கு உணவு கொடுத்த பெண்ணின் வாக்கு மூலத்தை பதிவு செய்த பின்னரே பிணைபற்றி ஆராயலாமெனக் கூறிய நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி காங்கேசன்துறைப் பொலிசாருக்கு இப்பெண்மணி வாக்குமூலத்தை பதிவு செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்நபர்கள் நேற்று மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்

(5ம் பக்கம் பார்க்க)

---

# கம்ப்யூட்டர்களை ரஷ்யாவுக்கு விநியோகிக்க வேண்டாம்

## பிரி., பிரான்ஸ், மே. ஜெர்மனிக்கு அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்டன், ஆக. 16

சோவியத் யூனியனுக்கு 'கம்யூட்டர்' இயந்திரங்களை விற்பனை செய்யவேண்டாமென்று பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மன் ஆகிய நாடுகளை அமெரிக்கா கேட்டுள்ளது.

சோவியத்யூனியனில் அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பவர்களுக்கு அரசு கடுமையான தண்டனைவிதித்து வருவதை ஆட்சேபித்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது என அமெரிக்கஅதிகாரிஒருவர் தெரிவித்தார்.

1980ம் ஆண்டு சோவியத் யூனியனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளின் போது தகவல் பரிவர்த்தனைகளை விரைவில் மேற்கொள்வதற்காக 70 லட்சம் டாலர்பெறுமதியான 'கம்யூட்டர்' இயந்திரம் ஒன்றைத்தருமாறு ரஷ்யா கேட்டிருந்தது. இக்கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது. (இ).

---

### வேலைநிறுத்தக்காரர் மீது துப்பாக்கிச் சூடு

#### 4 ரொடீஷிய கறுப்பர் பலி!

சாலிஸ்பரி, ஆக16

ரொடீஷியாவில் பொலிசாரின் துப்பாக்கிச்கு நான்கு கறுப்பு இன செப்புச் சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர் 5 தொழிலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர். என்றும் அறிவிக்கப்பட்டது.

சாலிஸ்பரிக்கு வடகிழக்கே உள்ள தென்னுபிரிக்காவுக்கு சொந்தமான சுரங்கம் ஒன்றில் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த போது அவர்களை நோக்கி பொலிசார் சுட்டதினுலேயே அந்த நான்கு பேரும் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது.

பொலிசாரை வேலைநிறுத்தக்காரர்கள் தாக்கியதை அடுத்தே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

### மல்லியின் நிர்ணய விலை

(யாழ்ப்பாணம்)

கொத்தமல்லியின் நிர்ணயிக்கப்பட்ட விலை றுத்தல் 4 ரூபா 90 சதமாகும். இந்த விலையிலும் பார்க்கக்கூட்டி விற்கப்படும் கொத்தமல்லி விலை கட்டுப்பாட்டதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படும்.

இச்சட்டத்தை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகளை, விலைக்கட்டுபாட்டதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு அந்தர் மல்லி 524 ரூபா 76 சதமென்றும், ஒரு றுத்தல் மல்லி 4 ரூபா 90 சதமென்றும் ஒரு அவுன்ஸ் மல்லி 31 சதமென்றும் விலைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இவ்வர்த்தகர்கள் மல்லியை றுத்தல் 4 ரூபா 96 சதமாக விற்று வருவதாக புகார் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-உ)

---

### ரிவோல்வர் திருட்டு: விசாரணைசெய்ய விசேட குழு நியமனம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை பிரதம பாதுகாப்பு அதிகாரியின் றிவோல்வர் திருடப்பட்டது குறித்து விசாரணை செய்ய விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை பிரதம பாதுகாப்பு அதிகாரி திரு. ஏ ஐ குவலியர் தமது வீட்டைப் பூட்டி விட்டு குடும்பத்தினருடன் வெளியில் சென்ற சமயம் அவரது வீட்டின் பின்பக்கக் கதவை உடைத்து உட்புகுந்த இனந்தெரியாதவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு அவருக்கு வழங்கப்பட்டிருந்த றிவோல்வர் ஒன்றை சன்னங்கள் நிரப்பப்பட்டநிலையில் திருடிச்சென்றிருந்தனர்.

வடபகுதி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. எகொடப்பிட்டியாவும் இதுகுறித்து விசாரணை செய்ய விசேட பொலிஸ் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

---

### 'சர்வாதிகாரத்தை நிலைநாட்ட அரசு முயற்சிக்கிறது'

(கொழும்பு)

''முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு இன்றைய அரசாங்கம் முயற்சிக்கின்றது'' என்று புதிய அரசியலமைப்பு குறித்து தொழிலாளர் மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு எச். எல். கே. கரவிட்ட விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறுர்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

''புதிய அரசியல் சட்டதிட்டம் தற்போது நம்நாட்டு மக்கள் அனுபவித்துவரும் முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளைக்கூட பறித்துவிட்டது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் யூ. என். பி. அரசாங்கம் தனது ஆட்சி ஆட்டங்காணுமல் தடுப்பதற்கு சர்வாதிகார அதிகாரங்களை நாடுகின்றது. மக்களின் பிரச்னைகளை யூ. என். பி. அரசாங்கம் தீர்க்கமாட்டாதென்பதைநாம்அறிந்துகொண்டதை யூ. என். பி. அரசாங்கம் மீண்டும் நிரூபித்துவிட்டது. எனவே முதலாளித்துவ ஜனநாயகத்தை அழித்துவிட்டு முதலாளித்துவ சர்வர்திகாரத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சிக்கின்றது இன்றைய அரசாங்கம்.

பதவிக்கு அமர்த்திய மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்துவிட்டு வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தினதும் அதனது உள்நாட்டு அடிவருடிகளினதும் செல்லப்பிள்ளையென்பதை அரசாங்கம் மறுமுறையும் நிரூபித்துவிட்டது.

இடைத் தேர்தல் முறையை ரததுச் செய்துவிட்டு பிரதிநிதித்துவம் இழந்த தொகுதிகளுக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் உரிமையை கட்சியின் பொதுச் செயலாளருக்கு அளிக்கும் அதிகாரம் இன்றைய அரசாங்கம் மக்களுக்கு முகம் கொடுக்க கிலி கொண்டுள்ளதென்பதைக் காட்டுகின்றது. அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்துவிட்டு தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதற்கு இனிமேல் முடியாது. மக்களின் அபிப்பிராயத்தை மதிப்புக் கொடுக்கமுடியாததோடு, சுதந்திரமான மனச்சாட்சியையும் குழிதோண்டிப் புதைக்கவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது.

வெளிநாட்டு மூலதனங்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் முயற்சியின்மூலம் நம் நாட்டு மக்களின் சுதந்திரமும் அபிலாஷையும் அப்பட்டமாக நிராகரிக்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையில்லாத எந்தவொரு அரசாங்கமும் வெளிநாட்டு மூலதனங்களையும் சொத்துக்களையும் தேசியமயமாக்கமுடியாதவாறு அரசாங்கம் செய்துள்ளது.

---

### அதிபர்கள் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வித்யாலய அதிபர்கள் சங்கக்கூட்டம் இம் மாதம் 19-ம் தேதி சனிக்கிழமை முற்பகல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

அதிபர்கள் சங்க உபதலைவர் திரு பொ. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ...ம் 5ம் தர அதிபர்களின் சம்பள விஷயமான ஆலோசனைகளை சமர்ப்பிப்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்படவிருக்கிறது (ச)

---

### காங்கேசன் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மாவிட்டபுரத்தில் வைரமுத்து சின்னத்துரை என்பவரது வீட்டினுள் இரவு நேரத்தில் புகுந்த திருடர்கள் வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும்போது தாலிக்கொடி, காப்பு, மோதிரம் உட்பட 8000 ரூபாவுக்கு மதிப்பான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதே குறிப்பிட்ட வீட்டுக்கு அருகிலுள்ள வேலுப்பிள்ளை இராஜரத்தினம் என்பவரது வீட்டினுள்ளும் புகுந்து சங்கிலி. ரொக்கப்பணம் ஆகியன உட்பட 2000 ரூபாவுக்கு மேற்பட்ட பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

மேற்படி இரு வீடுகளுக்குள்ளும் வெகு சாதுரியமாகப் புகுந்து நகை, பணம் கொண்ட சூட்கேசுகளை எடுத்துக்கொண்டு போய் சிறிது தூரத்தில் வைத்துத் திறந்து பொருட்களை எடுத்துக் கொண்டு சூட்கேசுகளைப் போட்டுவிட்டுச் சென்று விட்ட திருடர்களைத் தேடி காங்கேசன்துறைப் பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க 38ம் இலக்க கிளை நிலையத்தை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அச்சமயம் பார்த்து காவ

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ். நாகவிகாரையில் தமிழ் அகதிகளும் இருந்தனர்

## சன்சோனி கமிஷன் முன் யாழ்.பௌத்த சங்கத்தலைவர்

(கொழும்பு)

நாகவிகாரையில், சிங்கள வர்களும், தமிழர்களும் அகதிகளாக இருந்தனர். இவர்களில் தமிழ் அகதிகள், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வியாபார நோக்கமாக வந்ததினுல், அவர்களுக்கு உறவினராக எவரும் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. பாதுகாப்புக் கருதியே அவர்கள் நாகவிகாரையில் அகதிகளாக இருந்தனர்.

இவ்வாறு நேற்று முன் தினம் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளித்த யாழ். பௌத்த சங்கத் தலைமைப்பீட குரு வண. விரம்புவே விமல பாரத தேரோ கூறினுர். சட்டத்தரணி திரு. ஹரிச்சந்திர விஜயதுங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வண. விரம்புவே விமல பாரத தேரோ தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

### நெஞ்சில் குத்திய இளைஞர்கள்

நான் பௌத்த நிலையத்தில் கடமையாற்றுகிறேன். 72 ம் ஆண்டு சிங்கள மகாவித்தியாலயத்தில் கடமை யாற்றினேன். 76-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 6ந் திகதி நான் வீதியால் போகும் போது சைக்கிளில் வந்த இளைஞர்கள் எனது நெஞ்சில் குத்திவிட்டு; யாழ்ப்பாணத்தை விட்டுப் போகும்படி கூறினுர்கள்.

நான் இதுபற்றி பொலிசில் புகார் செய்தேன். அந்த இளைஞர்களுக்கு எதுவித துன்பமும் செய்யவில்லை. 77-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி மின்சார நிலைய வீதியால் போகும் போது ஒருவர் என்னை கெட்டவார்த்தைகளால் ஏசினுர். 77-ம் ஆண்டு மே மாதம் 10ந் திகதி நான் ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது என்னை ஆஸ்பத்திரியில் வைத்து 2 இளைஞர்கள் கேவலமாகப் பேசினர். எனக்குத் தெரிந்த 2 பாடசாலை மாணவர்கள் அவர்களைப் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்.

76-ம் ஆண்டு மே மாதம் 5-ந்திகதி இரவு 11-00 மணியளவில் பௌத்த நிலையம் தீயிடப்பட்டது. அன்றிரவே தர்மசாலையும்தீயிடப்பட்டது. அன்றிரவு நான் இதுபற்றி பொலிசில் முறைப்பாடு செய்தேன். 77-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி காலை 10 மணிக்கு இளைஞர்கள் தர்மசாலைக்கு கல் எறிந்தனர். சுமார் 10-15 பேர் வந்து கல் வீசியதால் நான் பயந்து பொலிசில் முறைப்பாடு செய்யவில்லை. 77-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி தர்மசாலை தீயிடப்பட்டது.

சட்: எரிக்கப்பட்ட தர்மசாலை எப்படி திருத்தப்பட்டது.

சாட்சி: கலாச் சாரத் திணைக்களம் முதலில் 1500 ரூபா வழங்கியது. அதன் மூலம் திருத்தப்பட்டது. 2-வது முறை தீயிடப்பட்டபின் எதுவித உதவியும் கிடைக்காததால் திருத்தப்படவில்லை.

சட்: விகாரைக்கு தமிழர்களும் தரிசிக்க வருவார்கள்?- ஆம்.

சட்: நீர் பௌத்த குரு என்பதாலா அல்லது சிங்களவர் என்பதாலா தாக்கப்பட்டீர்?

சாட்சி: இரண்டு காரணங்களாலும்.

சட்: தீயிடப்பட்ட போது எத்தனை பேர் வந்தார்களென்று சொல்ல முடியுமா?

சாட்சி: நான் உள்ளே நித்திரையாக இருந்ததால் பின்னர் வெளியில் வந்து பார்த்தபோது யாரும் இருக்கவில்லை.

சட்: விகாரையில் சிங்கள அகதிகள் இருந்தார்கள்?- ஆம்.

சட்: தமிழ் அகதிகளும் இருந்தனரா?-ஆம்.

சட்: இப்போது அங்கு வீதியால் சிங்களவர்கள் நடந்துசெல்ல முடியாத நிலையுண்டு?-ஆம்.

### சிங்களப் பகுதியில் தமிழர்கள் துன்புறுத்தப்படவில்லை

சட்: சிங்களப்பகுதியிலுள்ள தமிழர்களுக்கு எவ்வித துன்புறுத்தலும் நடக்கவில்லை?- நடக்கவில்லை.

சட்; யாழ்ப்பாணத்தில் மட்டும் சிங்களவர் துன்புறுத்தலுக்குள்ளாகினர்?-ஆம்.

சட்: எத்தனை சிங்களக் குடும்பங்கள் அங்கிருக்கின்றன.

சாட்சி: கலவரத்தின் முன் 700 குடும்பங்கள் இருந்தன.

ஒரு கட்டத்தில் குறுக்கிட்ட சட்டத்தரணி திரு. அண்டவூட் தர்மசாலைகள் ஒரு சிகரட் துண்டை எறிந்தாலும் தீப்பிடித்திருக்கும்.

சாட்சி: இதை ஒப்புக் கொண்டார். (ம)

---

"ஜனநாயக விரோத நடவடிக்கையை

## முறியடிக்க தொழிலாள வர்க்கம் தயாராகவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தால்எதையும்சாதிக்க முடியும் என்பதை 1953ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மாபெரும் கர்த்தால் நிரூபித்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி ஜனநாயகப் போர்வையில் அமுல்நடத்த முயலும் பாசிஸசட்டங்களை முறியடிக்க தொழிலாள வர்க்கம் அரசியல் வேறுபாடுகளை மறந்து போராட்டத்தில் குதிக்க தயாராகவேண்டும்."

மேற்கண்டவாறு லங்கா தொழிற்சங்க சம்மேளன வடபிரதேச செயலாளர் திரு. எஸ். நடராசா வடமாகாண ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தை வலியுறுத்தும் கருத்தரங்கிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"யாழ். மாவட்டத்தில் சாப்புச் சட்டம் சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை. தொழில் அதிகாரிகள் இதில் பராமுகமாக இருக்கின்றுர்கள். தொழிலாள வர்க்கம் போராட்ட மூலம்தான் இவற்றைச்சரிவர அமுல்நடத்த முடியும். தொழிலாள வர்க்க விரோத வெள்ளை அறிக்கை தொழிலாள வர்க்கத்தின் நேரடி எதிர்ப்பால் அமுல்செய்யப்படவில்லை. ஜனநாயக விரோத நடவடிக்கைகளை முறியடிக்க தொழிலாள வர்க்கம் தயாராகவேண்டும்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. கு. பரராசசிங்கம், ஜாதிக குருசங்கத்தைச் சேர்ந்த திரு. எம். குமாரசாமி இலங்கைதொழிற் சங்கசம்மேளனத்தைச்சேர்ந்த எம். இக்பால்,தேசிய ஆசிரியர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. எஸ்.கே. சுந்தரலிங்கம், அரசாங்க லிகிதர் சேவை சங்க உபதலைவர் திரு. வே. பொன்னம்பலம் உட்பட பலர் கருத்தரங்கில் பங்கு பற்றினர்.

---

### ரமலான் சிந்தனைகள்

"நோன்பாளியே! உண்ணல், பருகுதல், சேர்க்கை இம்மூன்றையும் விட்டுத் தவிர்ந்திருப்பதுவே நோன்பாகும்; என்று எண்ணிவிடாதே! எத்தனையோ நோன்பாளிகள் இருக்கின்றனர். ஆனுல் அவர்கட்கு, அவர்களின் நோன்பினுல் பசியும் பட்டினியுமேதவிர வேறு ஒன்றும் கிடைப்பதில்லை என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவாக்கியமாகும். ஆகவே உன் நோன்புகளுக்குப் பூரண நன்மைகள் கொடுக்கப்பட வேண்டுமானுல், வெறுக்கத்தக்கவைகளைப் பார்ப்பதை விட்டும் உன் கண்களைப் பேணிக்கொள். உன் நாவை தேவையில்லாப் பேச்சுக்களைப் பேசுவதை விட்டும் பேணிக்கொள். உன் செவியை அல்லாஹ் ஹராமாக்கியதை விட்டும் பேணிக்கொள். இவ்வாறே உன்னுடைய எல்லா உறுப்புக்களையும் ஹராமான வழியில் உபயோகிக்கப் படுவதை விட்டும் நீ பாதுகாத்துக்கொள்."

—இமாம் ஹஸ்ஸாலி (ரஹ்)

தொகுப்பு: ஏ.சி.எம். மஸ்ஹூர் யாழ்நகர்.

---

### வசாவிளான்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், காங்கேசன்துறைப் பொலிசாரால் சமர்ப்பிக்கப்பட்ட உணவு கொடுத்த பெண்ணின் வாக்கு மூலத்தையும் ஆராய்ந்த நீதிபதி சந்தேக நபர்கள் இருவரையும் தலா 750 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை நவம்பர் மாதம் 13ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ)

### காங்கேசன்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லாளியான வேலுப்பிள்ளை என்பவர் விழித்துக் கொள்ளவே தப்பிஓடிவிட்டார்களாம்.

இவ்வாறு திருட்டுக்கள் அதிகரித்து வருவதையடுத்து பொதுமக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. (உ)

---

## ஆனந்தகுமாரசுவாமி நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி நூற்றுண்டுநினைவு நாள் விழா இம்மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படுகிறது.

ஆனந்தகுமாரசுவாமி கலாச்சாரசபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

செவ்வாயன்று காலை 10 மணிக்கு யாழ். மாநகரசபை முன்றலிலுள்ள கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதுடன் விழா ஆரம்பமாகும்.

10.00 மணிக்கு செல்வி மஞ்சுளா தீட்டிய கலாயோகியின் உருவப்படத்தை யாழ் வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் திரைநீக்கம் செய்துவைப்பார்.

யாழ். பொதுசன நூல்நிலையத்தில் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி தொடர்பான புத்தகக்கண்காட்சிஒன்றுநடைபெறும்.

மாலை 5-30 மணிக்கு யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு, அ.அமிர்தலிங்கமும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கிறுர்கள். கூட்டத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி க. இந்திரபாலா, திரு ஜேம்ஸ் ரி. இரத்தினம், டாக்டர்பத்மநாதன், திரு. வி. எஸ். துரைராஜா ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

விழாவில் அரஸ்கோ சகோதரிகளின் நடனம், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் நாடகம், அமெரிக்க தகவல்பகுதியினரின் படக்காட்சி ஆகியனவும் நடைபெறும்,

இவ்விழா தொடர்பாக கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி கலாச்சாரசபைக் காரியதரிசி திரு. வி. எஸ். துரைராஜா

(6-ம் பக்கம் பார்க்க)

### அனலைதீவு ஐயனர் தேர்

(அனலைதீவு)

அனலைதீவு ஐயனர் கோவில் தேர் உற்சவம் நாளை நடைபெறவுள்ளது. நாளை மாலை தீர்த்தோற்சவம் நிகழும். மறுநாள் பூங்காவனத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
விஜயகுமார் கே. ஆர். விஜயா
**ஞானசபதம்**

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**REGAL** Jaffna
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00, & 9-30 p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
**THE CASSANDRA CROSSING**
All passes and Concessions Suspended

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
நாதம் கேட்குதடி நல்லூர் நாதன்......
கோபுர ஆலய மணியின் நாதம் கேட்குதடி
3 வது வாரம்
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம் நடிக்கும்
**தெய்வம் தந்த வீடு** (சினிமாஸ் கோப்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன் நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம் சுதா-வை.விஜயா நடித்த
கடைசி வாரம்
**மன்மத லீலை** (ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு நடித்த
**ம கா தே வி** [புத்தம் புதிய பிரதி]

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
**சொல்லத்தான் நினைக்கிறேன்**
22-8-78 முதல் வளர்பிறை

**லிடோ** (யாழ்.ந போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
**தீர்க்க சுமங்கலி**

**போயா தினத்தை யொட்டி இன்று சினிமாகாட்சிகளில்லை**

**Rio** (Jaffna) Phone: 7607
[illegible]ily 4 Shows
**NOT NOW COMRADE**

# 'கோரிக்கைகளை அரசிடம் எடுத்து கூறத்தான் முடியும்'

## கூட்டணி எம். பி.க்களின் நிலைபற்றி 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

'உபஅஞ்சல் அதிபர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. இக்கோரிக்கைகளை நாம் அரசிடம் எடுத்துச் சொல்லி நீதிகேட்கலாம், நியாயத்துக்காக வாதிடலாம். ஆனல் இக்கோரிக்கைகளை நாம் நிறைவேற்றித்தரலாம் என உறுதிகூறமுடியாது. காரணம் நாம் ஆளப்படும் இனம்'' என்று யாழ். மத்திய சல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை உபஅஞ்சல் அதிபர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

பொதுக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. க. இராஜசிங்கம் தலைமைதாங்கினர். பெண்களுட்பட நூற்றுக்கு அதிகமான பிரதிநிதிகள் குடாநாட்டின் பலபகுதிகளிலிருந்தும் கலந்துகொண்டனர்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''20 ஆண்டுகளுக்கு மேலாக உபஅஞ்சல் அதிபர்களின் கோரிக்கைகளை நாம் பேரவையில் எடுத்துச் சொல்லி வருகின்ருேம். அமைச்சர்கள் உங்கள் கோரிக்கைகள் நியாயமானதென ஏற்றுக்கொண்டாலும் நிவாரணம் வழங்க தயங்குகின்றனர். காரணம் உபஅஞ்சல் அதிபர்கள் ஒரு சங்கமாக இயங்காமல் பலகோணங்களில் கோரிக்கைகளை வலியுறுத்தும்போது உங்களது ஒற்றுமையினத்தைப் பயன்படுத்தி அமைச்சர்கள் தட்டிக்கழிக்கின்றனர்.

புதிய அரசின் திட்டப்படி, ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒவ்வொரு ஆலோசனைக்குழு இயங்குகின்றது. தபால் அமைச்சின் குழுவில் எமது பிரதிநிதியாக கோப்பாய் எம். பி, திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை அங்கம்வகிக்கின்ருர். அவர் மூலம் சிலபிரச்னைகளையாவது எடுத்துச் சொல்லி நிவாரணம் பெற்றுத்தருகின்றேன்''

### நல்லூர் சிவா

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், ''தொழிற்சங்கங்கள் எங்களை திட்டித்தீர்ப்பது வழக்கம். இன்றைய அரசு சில பிரச்னைகளையாவது நியாயமான நிலையில் தீர்த்துவைப்பதால் ஓரளவு எங்களைத் திட்டாமல் இருக்கின்றீர்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு நன்றி கூறவேண்டும் என்ருர்.

போஷகர்களில் ஒருவரான சித்தன்கேணி உபதபால் கந்தோர் அதிபர் திரு. கே. இராசரத்தினம் பேசுகையில், விவசாயிகளுக்குக்கூட அரசு பென்ஷன்வழங்க உத்தேசித்திருக்கும் இவ்வேளையில் உபதபால் அதிபர்களுக்கு பென்ஷன் வழங்கப்படாதது அநீதியான செயல் என்றும் தொலைபேசி அழைப்புக்களுக்காக மணித்தியாலக் கணக்காக தபால் கந்தோர்களில் காத்திருக்கும் பொதுமக்களின் சிரமத்தைப்போக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தலைவர் திரு. இராஜசிங்கம் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

உப-அஞ்சல் அதிபர்களின் சேவை 1921ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இப்போது 2500 உப அஞ்சல் அதிபர்கள்சேவையாற்றுகின்றனர். அவர்களின் நீண்டகாலக் குறைகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படாதது மிக மனவேதனைக்குரிய விஷயம்.

நாட்டின் தபால் தந்திச் சேவைகளின் முதுகெலும்பாக உப அஞ்சல் அதிபர்கள் விளங்குகின்றனர்.

சேவையிலிருந்து இளைப்பாறும்போது வழங்கப்படும்சகாய நிதிப்பணம் திரட்டப்பட்ட சம்பளத்தின்படி வழங்கப்படல்வேண்டும். இது நீண்டகாலம் சேவையாற்றிய உப அஞ்சல் அதிபர்களுக்கு பெரிதும் பயன்படும்.

யாழ்ப்பாணப்பகுதி தபால் அத்தியட்சகர் திரு. எஸ். பாலசிங்கம் உட்பட மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர்கள்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத் தர்கள கத் தெரிவுசெய்யப்பட்டனர்,

போஷகர்கள்: எஸ். கதிரவேலுப்பிள்ளை (கோப்பாய் எம். பி.), சே' இராசரத்தினம் (சித்தன்கேணி), தலைவர்: க. இராஜசிங்கம் (கொழும்புத்துறை), உபதலைவர்கள்: க. ஆறுமுகம்(வதிரி), ஏ, கோபாலரத்தினம் (நல்லூர்), செயலாளர்: க. சிவஸ்கந்தா (நாகேந்திரமடம்), உபசெயலாளர்: ஆர், ரவீந்திரன் (மீசாலை), பொருளாளர்: இ. நடராசா (புத்தூர்)

மேலும் 12 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யபபட்டனர். (கெ-இ)

---

## யாருடையவை?

உரும்பராய் பாலா அரிசி ஆலையின் உரிமையாளர் திரு. சி. பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் மாலை ஏழு மணியளவில் திருநெல்வேலிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் பஸ்ஸில் கண்டெடுத்த மகளிர் சிறுபணப்பை (பேர்ஸ்) ஒன்றை 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். அதனுள் சிறிது ரொக்கப்பணமும் உள்ளது. தவறவிட்டவர்கள் 'ஈழநாடு' அலுவலகநேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஃ ஃ

ஆரியகுளத்திற்கும் வெலிங்டன் தியேட்டர் சந்திக்கும் இடையில் இலங்கை வங்கியின் காசோலை ஒன்று யாழ். கீதா டீசல் எஞ்சினியரிங் ஸ்தாபனதில் கடமையாற்றும் திரு. ரி. ஜெகநீதன் என்பவரால் கண்டெடுத்து ''ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளா. உரியவா அலுவலக நேரத்தில் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## ஆனந்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் நூற்ருண்டுவிழா உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டபோது நமது நாட்டில் நடைபெற்ற இனக்கலவரம் காரணமாக இவ்விழாவைச் சரியானமுறையில் கொண்டாடமுடியவில்லை. எனினும் நாம் அப்போது ஆலயவழிபாட்டுடன் அன்னரை நினைவு கூர்ந்தோம்.

ஆண்டுதோறும் அன்னரின் நினைவுக் கூட்டத்தை நாம் கொழும்பில் நடத்திவருகிருேம். இம்முறை பலரின் வேண்டுகோளுக்கிணங்க இவ்விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப் படுகிறது''.

---

### யாழ். நவீன சந்தை

## ஒப்பந்தங்களைப் புதுப்பிக்கவேண்டும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட் ஒப்பந்தங்களை கடை உரிமையாளர்கள், மாநகர சபையுடன் புதுப்பிக்கும்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ். பாஸ்கரலிங்கம் கூட்டிய மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் ஆணையாளர் திரு. கே. சிவஞானம், நவீனசந்தை வர்த்தகர் உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. த. சங்கரப்பிள்ளை, செயலாளர் திரு. கே. முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள வாடகையையே வழங்கவேண்டுமென்றும், கடைகளை தகப்பன் மகனுக்கும், கணவன் மனைவிக்கும் மாற்ற அனுமதிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இரண்டு மலசலகூட வசதிகளும். தண்ணீர்ப்பைப் வசதிகளும் செய்யவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது'

---

## இரதோற்சவம்

(மட்டுவில்)

மீசாலை வெள்ளை மாவடி திருநீலகண்ட விநாயகரின் இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. விநாயகப்பெருமான் சித்திரத்தேரில் இன்று காலை வீதியுலா வருவார். இதைத் தொடர்ந்து நாளை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். பிரதம குரு மட்டுவிலூர் பிரம்மஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இந்த வைபவங்கள் நடைபெறும்.

(யாழ்ப்பாணம்)

அங்கணம்மைக்கடவை ஸ்ரீமீனட்சி அம்மை ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

## விசேட விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ், லயன் மகளிர் கழக ஆதரவில் இன்றுமாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் திருமதி லோகி மரியதாஸ் விசேட விரிவுரை ஒன்றை நிகழ்த்துவார். (இ)

## கூட்டணிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி கருத்தரங்கு கலட்டி அம்மன் கோவில் முன்றலில் இன்று வியாழன் மாலை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

'இன்றைய அரசியலும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்' என்ற தலைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கமும், 'சமூகக் குறைபாடுகளும், அவற்றை நீக்கும் வழிமுறைகளும்' என்ற தலைப்பில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், 'இளைஞர் சமுதாயமும், கட்டுப்பாடுகளும்' என்ற தலைப்பில் திரு. வெ. யோகேஸ்வரனும் உரைநிகழ்த்துவார்கள். (க-அ)

---

## கீரை விதை இலவசம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்குக் கீரை விதைகளை யாழ்ப்பாணம் 'மில்க் வைற்' தாபனத்தார் இலவசமாக வழங்குகிருர்கள். தேவையுள்ளவர்கள் அவர்களோடு தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

---

## இலவச இந்து சமய வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

ஆவணி விடுமுறைகால இந்து சமய ஆசிரியர்களுக்கும் சமய ஆர்வமுள்ளவர்களுக்குமான விசேட இந்து சமய இலவச பயிற்சி வகுப்புக்கள் நல்லை ஆதீனத்தில் இம்மாதம் 11ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 25ம் திகதிவரை நடைபெற இருக்கும் இவ் வகுப்பில் இன்று காலை பிரம்மஸ்ரீ வ. குகசர்மா 'முப்புராணங்கள்' பற்றியும், சித்தாந்த பண்டிதர் டாக்டர் நா. கனகரத்தினம் 'சமயமும் தேகாரோக்கியமும்' பற்றியும் பிற்பகல் பண்டிதர் மு. கந்தையா 'கேவல, விசிட்ட, சுத்த, அத்துவித வேறுபாடுகள்' என்பது பற்றியும் பயிற்சி வகுப்புக்களை நடத்துவர். (இ)

---

## ஒரு மாதத்தில் 2 புதிய கச்சேரிகள்

(கொழும்பு)

புதிதாக அமைக்கப்பட உள்ள மாவட்டங்களான முல்லைத்தீவிலும், கம்பஹாவிலும் இன்னும் ஒருமாத காலத்தில் புதிய கச்சேரிகள் நிறுவப்பட்டுவிடும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

---

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சனசமூக நிலைய 25வது ஆண்டு விழாவையொட்டி நடைபெறும் விளையாட்டுகளின் முதல் நிகழ்ச்சியாக நாளை மாலை 4-30 மணிக்கு வண. பிதா நேசநாயகம் தலைமையில் வீரப்புலம் ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய திடலில் உதைபந்தாட்டம் நடைபெறும்.

---

## கர்திளுல்களில் ஒருவர் மரணம்

ரோம், ஆக. 16

பாப்பரசர் 6வது சின்னப்பர் காலமானதின் காரணமாக ரிதிய பாப்பரசர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக கூடியிருந்த கர்திளுல்களில் ஒருவரும் ரோமாபுரியில் காலமானர்.

போர்யுபின் என்ற இந்த கர்திளுலின் மறைவு காரணமாக புதிய பாப்பரசரை தெரிவுசெய்யவிருக்கும் கர்திளுல்களின் எண்ணிக்கை 111ஆகஇருக்கும்.

---


உங்கள் பணத்திற்கு கூடுதல் பெறுமதியும் பெரும்சக்தியும்கொண்டது

வெஸ்பா ஸ்கூட்டர்கள்

ஒயிலானது நமக்கு ஏற்றது

VESPA
Made In Italy

இத்தாலியில் உருவாகியது. யாழ்நகரில் சுலபமாகக் கிடைக்கிறது.

● நீடித்த பாவனை ● அதிக உழைப்பு ● சொகுசான சவாரி ● இயக்க செயல்பாடு ● காதலரின் கனிவான சவாரி ● சிறந்த பயன் அனைத்தும் நிறைந்தது.

வெஸ்பா... வெஸ்பா...

வடபகுதியின் ஏக விநியோகஸ்தர்கள்:

சி. சின்னத்துரை அன் பிரதர்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 284. -- தந்தி: கல்கி.

முக்கிய கவனிப்பு:

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள சின்னத்துரை அன் கொம்பனி காட்சிச்சாலையில் மொடல்களைப் பார்வையிடலாம். தொலைபேசி: 7357.


---


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka